**அபிவிருத்தி லொத்தர் சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக்

கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் உள்ள ஊழியர் நலன் பொறுப்புக்களுக்காக வைக்கப்பட்டுள்ள நிலையான வைப்புக்களுக்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 838,937 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக விரிவான வருமானக் கூற்றில் இலாபம் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் முதலீட்டு பெறுமதியில் ரூபா 838,937 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்களின் வட்டி 2021.12.31 இல் உள்ளவாறு கணிப்பிடும் போது நாட்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையான வைப்புக்கள் 2021.06.07 முதல் 2022.06.07 வரையான காலத்தில் காணப்படுகின்றமையால் அது முதிர்ச்சியடையும் போது வங்கியினால் வழங்கப்படுகின்ற வட்டி கணிப்பிடப்பட்டு ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த வேறுபாடுகள் சரிசெய்யப்படும். | ஆண்டிற்குரிய வட்டி சரியாக கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,757,377 தொகையான அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமானத்தேய்வினை சரிசெய்யும் போது மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு கணக்கில் செலவு வைத்ததன் காரணமாக மீளாய்வாண்டில் உள்ளபடியான பெறுமானத்தேய்வு ரூபா 1,757,377இனால் குறைவடைந்திருந்தது. | இந்த ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட ரூபா 1,757,377 கணக்கு குறிப்புக்களுடன் இணங்குவதுடன் இந்த வேறுபாடு திரண்ட பெறுமானத்தேய்வு கணக்கில் காணப்பட்ட வேறுபாடாகும். இந்த வேறுபாடு நடப்பாண்டின் போதான பெறுமானத்தேய்வுக் கணக்கு மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வுக் கணக்குகளுக்கு இடையே சரிசெய்யப்பட்டுள்ளது. LKAS 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டில் வேறபாடுகள் நடப்பாண்டில் கணக்கீடு செய்யுமாறு காண்பிக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டிற்குரிய அதிகரித்து கணிப்பிடப் பட்டிருந்த பெறுமானத்தேய்வு அளவு மீளாய்வாண்டிற் குரிய உள்ளபடியான பெறுமானத் தேய்வுகளில் குறைக்கப்பட முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | | அதனால் மீளாய்வாண்டிற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (இ) | 2018 நவம்பர் 08 ஆந் திகதி சபைக்கு கிடைக்கப் பெற்று தற்போது பயன்படுத்தப்படுகின்ற சீட்டிழுப்புக்கு பயன்படுத்தப்படுகின்ற பந்துகளின் நிலைமையினை பரீட்சிக்கும் இயந்திரம் (Drawing Ball Validation Machine) 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபையின் சொத்தொன்றாக கணக்கு செய்யப்பட்டிருக்கவில்லை. | Drawing Ball Validation Machine என்ற விடயம் 2018 ஆம் ஆண்டில் சீட்டிழுப்பு இயந்திரத்துடன் அறவிடப்படாமல் வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்தது. நிலையான சொத்து பதிவேட்டில் 2022 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குரிய சகல சொத்துக்களையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 84 கையடக்கத் தொலைபேசிகளின் பெறுமதி ரூபா 286,350 ஆக 2019 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்தது. அந்த கையடக்கத் தொலைபேசிகள், அலுவலக உபகரணங்கள் சொத்து தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. கையடக்கத் தொலைபேசியில் 50 சதவீதமும் மற்றும் அலுவலக உபகரணங்களில் 25 சதவீதமுமாக பெறுமானத்தேய்வு செய்தல் சபையின் கொள்கையாக இருந்தது. கையடக்கத் தொலைபேசி, அலுவலக உபகரணங்கள் சொத்து தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையினால் வருடாந்தம் 25 சதவீதம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. எனினும் கையடக்கத் தொலைபேசி 50 சதவீதப்படி பெறுமானத்தேய்வு | 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் சபையின் மூலம் கையடக்கத் தொலைபேசி, அலுவலக உபகரணக் கணக்கில் வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் தோன்றியிருந்தது. இந்த கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய சொத்துக்களை இனங்காண்பதற்காக தற்போது உள்ளக கணக்காய்வு பிரிவு முன்னின்று சொத்து கணிப்பீடொன்றை மேற்கொள்கின்றது. இதன் மூலம் உள்ளபடியாக இன்றிய சொத்துக்களை அகற்றி உரிய சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவு செய்யப்படுகின்ற சொத்துக்கள் சரியான தொகுதியின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்குமாயின் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் அதன் தேறிய பெறுமதி பூச்சிய பெறுமதியாக இருக்க வேண்டியதுடன் அந்த தவறும் மீளாய்வாண்டின் போது சீராக்கப்பட்டிருக்குமாயின் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 143,175 திரண்ட நிதியில் வரவு வைத்து பெறுமானத்தேய்வு ஒதுக்கல் கணக்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு இல்லாமையினால் மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 71,558 அதிகரித்தும் நிதி நிலைமைக் கூற்றில் கையடக்கத் தொலைபேசிகளின் தேறிய பெறுமதி ரூபா 71,558 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | கடன்பட்டோரினால் ரூபா 1,354,016 செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்த துடன் அந்த தொகையை அறவிடுவதற்கு சபையால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,354,016 தொகைக்கு உரிய வங்கி பிணையின் மூலம் பெற்றுக் கொள்வதற்கான கடிதம் 2019 யூன் 12 சணச வங்கி உக்குவல கிளைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் வங்கியால் வங்கிப் பிணை நிபந்தனைகளை மீறி செலுத்தப்பட்டமை புறக்கணிக்கப்பட்டிருந்தது. அதனால் சபையால் தற்போது இலக்கம் DMR 875/21 வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக 2022 இன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து கொடுக்கல் வாங்கல் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஒரு ஆண்டினை விஞ்சிய ரூபா 1,354,016 தொகையான கடன்பட்டோருக்காக 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன்பட்டோரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,354,016 தொகையை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபையின் அபிப்பிராயப்படி இந்தப் பணத்தை அறவிடும் ஆபத்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காணப்படாதிருந்தமையால் இதற்காக அறவிடமுடியாக் கடன் ஒதுக்கி கணக்குகளில் குறிப்பிடுவதற்கான தேவையொன்று காணப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக காணப்படுகின்ற மீதியாக இருந்தமையால் அதற்காக அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (எ) | தற்போது பயன்படுத்தப்படுகின்ற உணவு அறை, களஞ்சிய அறை மற்றும் மதிலை மீண்டும் அமைத்தல் என்பவற்றுக்காக 2018 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட முறையே ரூபா 1,336,676 தொகை, ரூபா 246,918 மற்றும் ரூபா 145,290 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,728,884 தொகை நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த விடயம் மூலதனமாக்கப்பட்டு பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட நிர்மாணங்களை மேற்கொள்ளும் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது. எனினும் பல சந்தர்ப்பங்களின் போது அந்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அதனை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. எனினும் இந்த நடைமுறை வேலையை பூர்த்தி செய்வதற்காக இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலமும் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட 03/2022 சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் படி அத்தியவசியமற்ற | பணிகளை பூர்த்தி செய்து சொத்தாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிர்மாணங்களை தற்காலிகமாக கைவிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த ஆண்டிலும் இந்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட சுற்றுநிருபம் வறிதாக்கப்பட்டதன் பின்னர் உரிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படும். | |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துரூல சான்றுகள் இன்மை

| | விடயம் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | விநியோகிக்கும் முகவரினால் பெறப்பட்ட ரூபா 20,150,000 பெறுமதியான லொத்தர் சீட்டுக்களுக்காக வங்கிப் பிணை வைத்தல் | வங்கி பிணைகளுக்குரிய ஆவணங்களின் மூலப்பிரதி | எதிர்காலத்தின் போது உரிய வங்கியினால் வங்கிப் பிணையை நீடித்து பெறப்பட்ட மூலப்பிரதி நீடிக்கப்பட்ட திகதி முதல் 14 நாட்களுக்குள் நிறுவனத்திற்கு வழங்க வேண்டியிருந்தமை மாவட்ட முகவர்களுக்கு அறிவிக்கப்பட்டு அதனை முறைமைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அது கிடைக்காதிருக்கு மாயின் தற்காலிகமாக உரிய விநியோகித்தல் விற்பனை முகவர் கணக்கை கணனி முறைமையின் மூலம் செயலிழக்கச் செய்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கி பிணைகளுக்குரிய ஆவணங்களின் மூலப்பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிலையான வைப்புக்களுக்காக | நிறுத்தி வைக்கப்பட்ட வரித் தொகைக்காக | நிறுத்தி வைக்கும் சான்றிதழ் பத்திரம் | நிறுத்தி வைத்தல் பணத்திற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 207,423 வரித் தொகை | வங்கி உறுதிப்படுத்தல் | தொடர்பாக வங்கிக்காக கடிதம் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளதுடன் தற்போது ரூபா 3,039,128 பெறுமதியான சான்றிதழ் பத்திரம் எங்களுக்கு கிடைத்துள்ளது. மேலும் 207,423 தொகைக்குரிய சான்றிதழ் பத்திரங்கள் உரிய வங்கிகளிலிருந்து இதுவரை வழங்கப் படாதிருந்ததுடன் இது தொடர்பாக எதிர்காலத்தில் உரிய வங்கிக்கு கடிதம் மூலம் அறிவித்து நிறுத்தி வைக்கும் சான்றிதழ் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சான்றிதழ் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிலையான சொத்துக்கள் தொடர்பான பட்டோலையின் ரூபா 7,464,727 பெறுமதி முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பதிவேடு | சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள வேறுபாடுகளுடன் இணங்குகின்றோம். இதில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி மிகவும் பழைய மீதியாக இருந்ததுடன் எதிர்காலத்தில் கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுப் பெறுமதியாக காண்பிக்கப் பட்டுள்ள சொத்துக்கள் தனித்தனியாக பதிவேடுகளுக்கு கொண்டு வரப்படல் வேண்டும். |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டின் போது நாளேடுகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 2,353,600 ஆன செலவினம் | பட்டியல்கள் | இதில் குறிப்பிடப்பட்ட 2015 நாளேடுகளுக்காக ரூபா 2,353,650 தொகை செலுத்த வேண்டிய செலவினமாக இருந்ததுடன் அதற்குரிய பட்டியல்களின் பிரதிகள் கணக்குப் பிரிவிடம் | காலாவதியான செலுத்தப்படாதுள்ள செலவினங்களாக இருந்தமையால் அதனை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளது. அது பெறுகைகள் பிரிவின் கோரிக்கையின் படி 2014 ஆம் ஆண்டில் அட்டுறு செலவினமாக உள்ளடக்கப் பட்டிருந்தது. இந்த அட்டுறு செலவினங்களை இரத்துச் செய்து எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் வொக்ஸ்ஸோல் வீதியில் இலக்கம் 234 என்ற கட்டிடம் 2006 ஒக்தோபர் முதல் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை ஒரு தரப்பினரால் மீறப்பட்டிருந்தது. இதனால் வைப்பு பணமாக செலுத்தப்பட்ட ரூபா 723,780 தொகை மற்றும் அந்த ஆண்டிற்காக செலுத்தப்பட்ட வாடகை தொகையில் ஒரு பகுதியான ரூபா 4,976,220 என்ற தொகைகளின் கூட்டுமொத்தமான ரூபா 5,700,000 தற்போது 16 வருட காலம் முழுவதும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு வழங்கியிருந்த பரிந்துரையை அமுல்படுத்துமாறு நிதியமைச்சின் சட்டப்பிரிவின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1990 ஆம் ஆண்டில் வோர்ட் பிரதேசத்தில் நபரொருவருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் | இந்தப் பணத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 2,520,000 தொகையான கட்டிட வாடகை வைப்பு பணத்தை அறவிடுமாறு கோரி 23 வருடங்களுக்கு முன்னர் தொடரப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு 2016 சனவரி 11 ஆந் திகதி கிடைத்திருந்தது. உரிய பணத்தை அறவிடுமாறு வழக்கு தீர்ப்பு வெளியிடப்பட்டு 06 வருடங்களுக்கு அண்ணளவான காலம் கடந்திருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பணத்தை அறவிடுவதற்காக நேரடியான தரப்பினர் தற்போது மரணமடைந்திருந்தமையால் அவரின் மகன் மற்றும் மனைவி இந்த வழக்கில் தொடர்புபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அவர்களுக்கு இந்த பணத்தை செலுத்துமாறு அழைப்பாணை சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. | |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் சந்தை மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கீழ் கடன்கொடுத்தோர் மீதியாக ரூபா 324,823,802 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. 2022 மே 31 ஆந் திகதி வரையில் அந்த மீதி ரூபா 43,656,155 ஆக இருந்தது. இந்த மீதியில் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 29,146,198 கடன்மீதி, ஒரு ஆண்டினை விட பழைய ரூபா 1,222,935 கடன் மீதியும், 02 வருடங்களை விட பழமையான ரூபா 8,382,316 கடன் மீதியும் மற்றும் 03 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பழைய ரூபா 4,904,706 கடன்மீதியும் காணப்பட்டது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்கப்பட்ட கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள மீதியில் இந்த கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுடன் இணங்குகின்றது. இதன் போது செலுத்த வேண்டிய கடன் மீதியின் கீழ் வியாபார கடன்கொடுத்தோராக காண்பிக்கப்படுகின்ற ரூபா 324,823,802 தொகையில் 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டு 2022 மே மாதம் வரையில் இந்த மீதி ரூபா 43,656,155 வரை குறைவடைந்திருந்தது. அதில் இந்தக் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வில் | நீண்டகாலமாக கொண்டு வரப்படுகின்ற மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் பழைய கடன்கொடுத்தோர் மீதியை வருமானத்திற்கு எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.6.3 முற்பணம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டில் தெயட்ட கிருள நிகழ்ச்சித் திட்டத்திற்காக தங்குமிட வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு 2014 ஆம் ஆண்டின் போது ஒரு நிறுவனத்திற்கும் மூன்று நபர்களுக்கும் கூட்டுமொத்தமாக ரூபா 202,800 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 08 வருட காலமாக சபையின் நிதியம் வெளித்தரப்பினருக்கு வைத்துக் கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | இந்த பணத்தை அறவிடுவதற்காக பல சந்தர்பங்களின் போது பணம் செலுத்தப்பட்ட தரப்பினருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பணம் அந்த தரப்பினரால் இதுவரை செலுத்தாமையால் விரைவாக உரிய பணத்தை அறவிடுவதற்கு பொலிசில் முறைப்பாடு செய்து சட்டரீதியான செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2013 ஆம் ஆண்டில் 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,877,144 தொகை மற்றும் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 749,583 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 3,626,727 தொகை தனியார் நிறுவனமொன்றுக்கு கட்டிட திட்ட மதியுரைக் கட்டணமாக முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. 08 வருடங்கள் முதல் 09 வருடங்கள் வரையான காலவீச்சில் சபையின் நிதியம் | பதிலளிக்கப்படவில்லை. | உரிய நிறுவனத்திலிருந்து முற்பண பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வெளித்தரப்பினருக்கு கையில் வைத்துக் கொள்வதற்கு சபையினால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் 17(5) ஆம் பிரிவு | ஏதாவது அபிவிருத்தி லொத்தர் பரிசு நலனாளிகளை தீர்மானிக்கின்ற திகதி முதல் கணிப்பீடு செய்யப்படுகின்ற ஆறு மாத காலஎல்லையை கடந்ததன் பின்னர் உரிய லொத்தரின் அந்த பரிசுக்குரிய உரித்தை கண்டறிவதற்கு முடியாமையின் காரணமாக அந்த லொத்தர் கையளிக்கப்படாத ஏதாவது பரிசுகள் அரசுடமையாக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதன் பின்னர் அது சனாதிபதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது அவ்வாறின்றி பரிசு ஒதுக்க நிதியத்தில் கிடைத்த பரிசின் அளவு ரூபா 15,341,900 ஆக காணப்பட்டது. | அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர்களுக்காக பரிசுகளை வழங்கும் சட்டத்தின் 17(5) மற்றும் 18(3) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படுகின்றது. பரிசு ஒதுக்க கணக்கை பயன்படுத்தி வழங்கப்பட்ட பரிசுகளுக்கான உரித்திற்காக முன்வராத பரிசுகளை மீண்டும் அந்த ஒதுக்க நிதியத்தில் செலவு வைக்க வேண்டுமென்ற நியதி சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த ரூபா 15,341,900 தொகை பரிசு ஒதுக்க நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவு | அரசாங்க நிறுவனங்களில் கள கடமைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் அவர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரயாணம் செய்கின்ற | அவரின் மோட்டார் வாகனத்தை பயன்படுத்தி அவர் எரிபொருளை பெற்று ஓடியமைக்காக கிலோமீற்றருக்காக எரிபொருள் படி ரூபா 40 ஆக பிரதேச முகாமையாளர்களுக்கு | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வாகனத்திற்காக ஒரு கிலோமீற்றருக்காக ரூபா 12 மாத்திரம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும் ஒரு கிலோமீற்றர் ஓடியதற்காக சபையினால் விற்பனை முகாமையாளருக்கு ரூபா 40 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 3,712,160 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்டுள்ளது. அந்த கொடுப்பனவுகள் 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதி நடைபெற்ற 205 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த படி அங்கீகாரத்துடன் வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி 104 | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 492,392 பெறுமதியான திஸ்ஸமகாராம காணி 2021 யூலை 31 ஆந் திகதிய இலக்கம் 2021/07/167 என்ற நாட்குறிப்பு பதிவின் மூலம் நீக்கப்பட்டிருந்தது. அவ்வாறு செய்வதற்கு 2021 மார்ச் 02 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக்கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதனை பதிவழிப்பதற்காக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த காவன்திஸ்சபுர காணி அபிவிருத்தி செய்வதற்கு செலவிடப்பட்ட கிரயத்தை பதிவழிப்பதற்குரிய நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பிரதிகளை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நி.பி 371(2) | மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 2,586,000 செயல்நிமித்த உபகட்டுநிதி பதவிநிலையற்ற உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | பிரயோக ரீதியில் காணப்படுகின்ற கஷ்டங்களின் காரணமாக இந்தப் பிரச்சினையை சரிசெய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் எல்லையினை விஞ்சுமாயின் அதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நி.பி 396 | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காலாவதியான ரூபா 610,274 கூட்டுப்பெறுமதியான 23 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் செலுத்த வேண்டிய காசோலைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | இந்த காசோலைகள் 2022 ஆம் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 142 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தி | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக சபையினால் ரூபா 250,000 இடர்கடன் எல்லையினை விஞ்சி 145 உத்தியோகத்தர்களுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 10,487,342 தொகையான இடர்கடன் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 யூலை 01 ஆந் திகதியின் பின்னர் இடர் கடனை வழங்கல் ஆகக்கூடியதாக ரூபா 250,000 வரையறுப்பதற்கு முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2018 நவம்பர் 14 ஆந் திகதிய இலக்கம் 02/2018 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 4,982,000 தனியார் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போது சபைக்குச் சொந்தமாக விநியோகிக்கும் விற்பனை முகவர்கள் 30 பேர்களுக்கு அண்ணளவான அளவு இந்தக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களினால் மேலும் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கையின் அடிப்படையில் கணக்குகளை மூடிவைத்தல் சபையின் நாளாந்த நிதி சேகரிக்கும் பணிகளுக்கு இடையூறாக இருந்தமையும் அவ்வாறில்லையாயின் நாளாந்த விநியோகித்தல் விற்பனை முகவர்களினால் தீர்த்து வைக்கப்பட வேண்டிய பண அளவு உயர்வடைந்து செல்லக் | தனியார் வங்கிகளில் முதலீடுகளை மேற்கொள் வதற்கு திறைசேரி அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கூடியதாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | |
| (ஊ) | 2015 ஒக்தோபர் 26 ஆந் திகதிய இலக்கம் டீ.எல்.பீ/எம்.ரீ/பொதானி/ சுற்றறிக்கை/2015 /14 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபையின் சுற்றறிக்கை | 2021 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை 14 நாட்கள் தாமதத்தின் பின்னர் கையளிக்கப்பட்ட மற்றும் 2022 செப்தெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் கையளிக்கப்படாத 42273 லொத்தர் புத்தகங்களுக்காக ஒரு லொத்தர் புத்தகத்துக்கான தாமதத்திற்காக அறவிட வேண்டிய ரூபா 25 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 1,056,825 தொகையை அறவிடப்பட்டமையை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஒக்தோபர் மாதம் வரையில் நாடு திறக்கப்பட்டதுடன் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டு பொது முகாமையாளரின் ஆலோசனையின் அடிப்படையில் நிறுவனத்தின் வாகனங்களை பயன்படுத்தி நவம்பர் மாத நடுப்பகுதி முதல் சகல மாவட்டங்களையும் மேவுகை செய்யும் வவகையில் இருப்புக்களை மீள அனுப்பி பெறப்பட்டிருந்தது. இந்த இருப்புக்களை பரீட்சிப்பதற்காக 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. கொரோனா தொற்றுநோயின் காரணமாக ஊழியர்கள் காத்திருத்தல் பதிவேட்டின் பிரகாரம் கோரப்பட்டமையால் இருப்பை பரீட்சிப்பதற்கும் தாமதம் ஏற்பட்டிருந்தது. அதனால் டிக்கட் சீட்டுக்களுக்கான செல்லுபடிக்காலம் விஞ்சியிருந்ததுடன் அதற்கான தண்டப்பணத்தை அறவிடுதல் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2021 நவம்பர் மாதம் முதல் குறித்துரைத்த பிரகாரம் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,953,528,558 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 2,993,501,638 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 39,973,080 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பரிசுகளுக்கான செலவினம் அதிகரித்தமை, விநியோகச் செலவினம் அதிகரித்தமை மற்றும் வருமானவரி அதிகரித்தமை பிரதானமான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

---------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் / செலவினம் | 2021<br>ரூபா | 2020<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | சதவீதமாக<br>சதவீதம் |
|---|---|---|---|---|
| ரிக்கட் சீட்டு வருமானம் | 15,364,398,498 | 15,033,029,360 | 331,369,138 | 2 |
| ஏனைய வருமானம் | 110,304,701 | 158,323,671 | (48,018,970) | 30 |
| கிரயம் | | | | |
| பரிசுச் செலவினம் | 7,865,640,218 | 7,702,515,219 | 163,124,999 | 2 |
| சீட்டிழுப்பு செலவினம் | 542,022,297 | 509,983,411 | 32,038,886 | 6 |
| விநியோக செலவினம் | 3,484,491,585 | 3,357,266,425 | 127,225,160 | 4 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் டிக்கட் சீட்டுக்களின் விற்பனை வருமானம் ரூபா 331,369,138 இனால் அதாவது 02 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சபையின் ஏனைய வருமானம் ரூபா 48,018,970 இனால் 30 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் போது பரிசுச் செலவினம் ரூபா 163,124,999 இனால் அதாவது 02 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது டிக்கட் சீட்டிழுப்புக்கள் செலவினம் ரூபா 32,038,886 இனால் அதாவது 06 சதவீதத்தினால் அதிகரித்திருீந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விநியோக கிரயம் ரூபா 127,225,160 இனால் அதாவது 04 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இந்த அதிகரிப்பிற்கு சந்தைப்படுத்தல் சார்ந்த செலவினம் ரூபா 3,266,071 இனால் அதாவது 52 சதவீதத்தினால் குறைவடைந்தமை, விளம்பரக் கிரயம் ரூபா 44,510,370 இனால் அதாவது 36 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் விநியோக கிரயம் ரூபா 17,951,582 இனால் அதாவது 12 சதவீதத்தினால் அதிகரித்தமையும் காரணமாக இருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் சபையின் செயற்பாடுகள் மற்றும் இலாபத் தன்மை மற்றும் திரவத் தன்மை காண்பிக்கின்ற விகிதங்கள் தொடர்பான பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2020 | 2021 |
|---|---|---|
| செயற்பாட்டு விகிதம் | சதவீதம் | சதவீதம் |
| விற்பனை வருமானத்தில் விற்பனை மற்றும் விநியோக செலவினம் | 22 | 23 |
| விற்பனை வருமானத்தில் விற்பனைக் கிரயம் | 58 | 58 |
| இலாபத்தன்மை விகிதம் | | |
| மொத்த இலாப விகிதம் | 42 | 42 |
| தேறிய இலாப விகிதம் | 20 | 19 |
| விற்பனை மற்றும் விநியோக செலவின விகிதம் மொத்த செயற்பாட்டு செலவினத்தின் சதவீதமாக | 87 | 87 |
| தேறிய இலாபத்தில் பரிசு கையளித்தல் விகிதம் | 11 | 12 |
| தேறிய இலாபத்தில் வருமான வரி விகிதம் | 0.4 | 2.8 |
| திரவ விகிதம் | | |
| நடைமுறை விகிதம் | 1:1.664 | 1:1.296 |
| விரைவு விகிதம் | 1:1.637 | 1:1.271 |

மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் பகுப்பாய்வு செய்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் முன்னாள் தலைவர் ஒருவரினால் சபையின் பெயரில் தனியார் நிறுவனமொன்றில் நவீன மிட்சுபிசி L200 கெப் வண்டியொன்று பணம் செலுத்தாமல் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அந்த கெப் வண்டிக்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையினால் உரிய நிறுவனத்திற்கு கூட்டுமொத்தமாக ரூபா 16,842,554 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். 2022 இன் கணக்காண்டின் போது அறவிட வேண்டிய பணமான ரூபா 16,842,554 தொகை கணக்கு அறிக்கைகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனத்தை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கும் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அந்த பணம் முன்னாள் தலைவரிடமிருந்து அறவிடுவதற்கு சபையினால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற போதிலும் அந்த வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் அறவிட வேண்டிய பணம் தொடர்பான தகவல்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது சரியாக மதிப்பீடு செய்யப்படாமையால் கூட்டுமொத்தமாக ரூபா 41,537,940 செலவில் அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்களில் 9,193,750 டிக்கட்டுக்கள் எஞ்சியிருந்ததுடன் மேலும் 80,918,070 லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படாமல் எஞ்சியிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் 2021 திசெம்பர் மாதம் வரை நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அவ்வவ்போது நாடு மூடப்பட்டமை, இந்த சுகாதார சிக்கல்களின் காரணமாக பொதுமக்கள் நகரங்களுக்கு வருகை தராமை, லொத்தர் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் வரையறுக்கப்பட்டமை, விற்பனை செய்யும் போது காணப்பட்ட கஷ்டமான நிலைமையின் காரணமாக விற்பனை முழுமையாக குறைவடைந்திருந்தது.<br>2021 ஆம் ஆண்டில் 80 நாட்கள் சீட்டிழுப்பு மேற்கொள்ளப்படாதிருந்த துடன் அந்த இரத்துச் செய்யப்பட்ட திகதிகளுக்குரிய அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் எதிர்வரும் மாதங்களின் போது பழைய திகதியில் அச்சடிக்கப்பட்ட லொத்தர் சீட்டுக்களாக விற்பனை செய்யப்பட்டிருந்தது. | சரியாகவும், பொருத்தமான தாகவும் மதிப்பீடு தயாரித்து லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எனினும் அந்த காலப்பகுதியில் சபையினால் சரியான கட்டுப்பாட்டுடன் லொத்தர் சீட்டுக்களை கட்டளையிடல் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் விற்பனையை மேம்படுத்துவதற்கு பல்வேறு வழிகள் எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த ஆண்டில் ஒட்டுமொத்த மீள அனுப்பும் சதவீதம் 10.6 சதவீதமாக இருந்ததுடன் சபை நடாத்திச் செல்லப்படுகின்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட மீள அனுப்பும் சதவீதம் 10 சதவீதமாகும் அந்தக் கிரயம் ஒட்டு மொத்த விற்பனை வருமானத்தின் சதவீதமாக எடுக்கும் போது 0.27 சதவீதமாகும். | |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அபிவிருத்தி லொத்தர் சபை என்ற பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகன பட்டியலுடன் அபிவிருத்தி லொத்தர் சபை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட வாகன பட்டியலை ஒப்பீடு செய்த போது மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் குறிப்பிடப்பட்ட 37 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி லொத்தர் சபையினால் அகற்றப்பட்ட கேள்வி மூலம் விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் ஒரு பகுதி கொள்வனவு செய்யப்பட்ட தரப்பினரால் அவை பதிவு செய்வதற்கு இதுவரையிலும் சமர்ப்பிக்காமையினால் அந்த மோட்டார் வாகனங்கள் சபையின் பெயரில் தற்போது வரையும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் காணப்பட்டமையால் இந்த பிரச்சினைகள் எழுந்திருந்தது. தற்போது இந்த 37 மோட்டார் வாகனங்களுக்கிடையில் 22 | விற்றுத் தீர்க்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்கள் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு காலரீதியில் அனுப்புதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மோட்டார் வாகனங்கள் தொடர்பான கடிதம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய மோட்டார் வாகனங்கள் தொடர்பான தகவல்களை விரைவாக சமர்ப்பித்து சபையின் பெயரில் பதிவு செய்துள்ள இந்த மோட்டார் வாகனங்களின் பதிவினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் மூலதன செலவினத்திற்காக ரூபா 256,585,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 12.4 சதவீதம் அதாவது ரூபா 31,822,204 மாத்திரம் மூலதன செலவினமாக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்கள இலக்கம் 07/2019, 03/2021 மற்றும் 07/2020 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் அத்தியவசியமற்ற சகல மூலதன செலவினங்களையும் வரையறுக்குமாறு ஆலோசனை வழங்கியதன் காரணமாக அத்தியவசியமாக மேற்கொள்ள வேண்டிய மூலதன செலவினத்திற்காக முன்னுரிமை வழங்குதல் மேற்கொண்டு மிகுதி மூலதன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சரியாகவும் பொருத்தமான தாகவும் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | சபையினால் 2012 ஆம் ஆண்டின் போது திரைக் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 38,752,448 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கலையரங்கத்தை நிர்மாணிப்பதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாமல் அது விளைவற்றுக் காணப்பட்டது. | தற்போது தாபிக்கப்பட்டுள்ள திரைக்கூடங்களில் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மேலும் கணிசமான கிரயமொன்றை செய்ய வேண்டி ஏற்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கிரய நலன் பகுப்பாய்வை மேற்கொள்வதற்காக தேசிய தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் அறிக்கை பெற்றுக் | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுகின்ற வகையில் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்ளப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் 2021.01.29 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள திரைக்கூடத்தை கேட்போர் கூடமாக நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில் சபைக்குச் சொந்தமான 06 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி ரூபா 305,000 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த 06 மோட்டார் சைக்கிள்களும் 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அலுவலக வளவில் வாகனத் தரிப்பிடத்தில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | 05 மோட்டார் சைக்கிள்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய மோட்டார் சைக்கிள்களை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு முடியுமான மட்டத்தில் காணப்பட்டது. | ஓட்ட நிலைமையில் உள்ள மோட்டார் சைக்கிள்களை சபையின் நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கும் ஏனைய மோட்டார் சைக்கிள்களை விற்றுத் தீர்ப்பதற்கும் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 மார்ச் 25 ஆந் திகதிய 2021/03/1768 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கத்தவருக்கு விற்பனை படையணியின் மேற்பார்வை நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையின் அங்கத்தவரின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்முயற்சிகளுக்கான நிறுவனக் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டியின் (GUIDLINES ON | கொரோனா ஆபத்து நிலைமை காணப்பட்ட காலத்தின் போது சபையின் விற்பனை முகவர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினையை கலந்துரையாடுவதற்கு முடியாதிருந்தது. இது தொடர்பாக 2021 மார்ச் 28 ஆந் திகதி பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அதற்காக குறுங்கால தீர்வொன்றாக பணிப்பாளர் சபை அங்கத்தவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் விற்பனை முகவர்களை சந்தித்து அவர்களின் பிரச்சினையை கலந்துரையாட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பொது முயற்சிகள் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப் பட்ட வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | CORPORATE GOVERNANCE FOR STATE OWNED ENTERPRISE) காண்பிக்கப்பட்டு தகவல்களுக்கு புறம்பாக நடவடிக்கை எடுப்பதாயின் அதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்தது. அவ்வாறான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக சபையின் வாகனம் மற்றும் ஒப்பந்தக்காரரை ஈடுபடுத்தி 06 மாதங்களுக்காக சாரதியொருவர் சேர்க்கப்பட்டிருந்தார். 2021 ஏப்ரல் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலஎல்லைக்காக கூட்டுமொத்தமாக ரூபா 407,712 மொத்த சம்பளமொன்று சாரதிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | அதன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வாகனமொன்றில் ஈடுபடுத்துவதற்கும் அந்த வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்தி சாரதி இல்லாமையால் ஒப்பந்த அடிப்படையில் சாரதியொருவர் நியமிக்கப்பட்டு 06 மாத காலத்திற்காக அவருக்காக ரூபா 407,712 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. தற்போது இந்த பணிப்பாளரின் சேவையை பெற்றுக் கொள்ள முடியாதிருந்ததுடன் அந்த வாகனம் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஆரம்பம் முதல் நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான பணி நடைமுறை கோவையொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அந்தப் பணிகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போது தகைமை பெற்ற ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். உரிய தரப்பினரால் அறிக்கை காணப்பட்ட சட்டங்கள், விதிகளை ஆய்வு செய்து உரிய பணி நடைமுறை கோவை தயாரித்து 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதி அபிவிருத்தி லொத்தர் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த பணிக்காக ரூபா 4,500,000 தொகை உரிய தரப்பினருக்கு | விதிகள் தொடர்பான வரைவு அறிக்கை சிங்கள மொழியில் மொழிபெயர்த்தல் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் நிறுவனத்தின் முகாமைத்துவம் இது தொடர்பாக கலந்துரையாடி மேலும் சரிசெய்ய வேண்டிய இடங்கள் சரிசெய்து கூடிய விரைவில் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுவதுடன் பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்த பின்னர் தமிழ் மொழிபெயர்ப்பினை செய்தலும் மேற்கொள்ளப்படும். | சட்டத்தின் பிரகாரம் சபைக்குத் தேவையான பிரமாணங்களை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,700,000 தற்போது இதுவரையில் செலுத்தப்பட்டுள்ளது. அவரால் உரிய பணி நடைமுறை கோவையின் பகுதி இரண்டாக சபைக்கு சமர்ப்பித்திருந்த போதிலும் சபையில தற்போது காணப்படுகின்ற திட்ட முறைக்கு இணங்காத வகையில் இந்த பணி நடைமுறைக் கோவை தயாரிக்கப்பட்டமைக்கு காரணம் காண்பித்து மிகுதி தொகையை செலுத்துதல் கைவிடப்பட்டிருந்தது. மேலும் இந்த பணிக்காக கையொப்பமிட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட் ''லொத்தர் மற்றும் சீட்டிழுப்பு நடவடிக்கைகளின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள்'' இற்காக விதிகளை தயாரித்தல் போன்ற பணிகள் கைவிடலாக சபையினால் அதனை தயாரித்து உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகார் உரிய பணிகள் தற்போது வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட நிதி போதியளவில் இல்லாத கொடுக்கல் வாங்கல்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்தப் பணிக்காக கையொப்பமிட்ட உடன்படிக்கை நிபந்தனையை மீறுதல் மற்றும் செலுத்த வேண்டிய மிகுதிப் பணம் தொடர்பாக சட்டரீதியான ஆபத்தொன்று காணப்பட்டமையும்

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) | நிலையான சொத்து பதிவேட்டின் பிரகாரம் 10 சீட்டிழுப்பு இயந்திரங்கள் காணப்பட்டதுடன் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் அவ்வாறான 15 இயந்திரங்கள் காணப்பட்டது. அதன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 05 சீட்டிழுக்கும் இயந்திரங்கள் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த சீட்டிழுப்பு இயந்திரங்கள் சபையில் மிகவும் பழைய தொழில்நுட்ப கோளாறுகளுடனான இயந்திரமாக இருந்ததுடன் தற்போது அந்த இயந்திரங்கள் சீட்டிழுப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டது. அதனால் இந்த சீட்டிழுப்பு இயந்திரங்களை மீண்டும் கணக்கு வைக்கும் தேவையொன்று காணப்படவில்லை. இந்த பழைய சீட்டிழுப்பு இயந்திரங்கள் நூதன பொருட்களாக காட்சிப்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஏ) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு பூச்சிய பெறுமதியாக காணப்பட்ட ரூபா 35,438,340 கிரய பெறுமதியுடன் சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது அந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மீள் மதிப்பீடு 2019 சனவரி 01 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 35 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களின் மீள் மதிப்பீடு 03-05 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் மேற்கொள்ள வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் 2019 ஆம் ஆண்டு முதல் 05 வருடங்கள் முழுமையடையும் வரையில் 2024 இன் நிதியாண்டின் போது மீண்டும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து தேவையான சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளது. | பூச்சிய பெறுமதியுடன் தற்போது செயற்பாட்டு நிலையில் காணப்படுகின்ற சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை விநியோகித்தல் விற்பனை முகவர்களினால் விற்பனைக்காக சபையிலிருந்து பெறப்பட்டு விற்பனை செய்வதற்கு முடியாது எஞ்சியிருந்த 422,730 லொத்தர் சீட்டுக்கள் சீட்டிழுத்ததன் பின்னர் 14 நாட்கள் காலம் கடந்திருந்த போதும் அந்த லொத்தர் சீட்டுக்கள் சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அவ்வாறு மீள வழங்கப்படாத லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்ய முடியாதிருந்தமையை உறுதிப்படுத்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | 2021 சனவரி மாதம் முதல் ஒக்தோபர் மாதம் வரை விநியோக விற்பனை முகவர்களினால் விற்பனைக்காக சபையிலிருந்து பெறப்பட்டு விற்பனை செய்ய முடியாது எஞ்சியிருந்த 77,031 டிக்கட் புத்தகங்கள் மீண்டும் சபைக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. மிகுதி 07 நாட்களில் விற்பனை முகவர்களுக்கு அறிவித்து கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அந்த காலஎல்லையில் மீண்டும் டிக்கட் புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருக்குமாயின் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகுதி டிக்கட் சீட்டுக்கள் தொடர்பாக சபை அறிமுகப்படுத்தி யுள்ள முறைமையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கொரோனா போன்ற தொற்றுநோய் காலப்பகுதியின் போது பௌதீக ரீதியில் கஷ்டங்களுக்கு ஒரு தீர்வாக E டிக்கட் சீட்டுக்கள் எண்ணக்கரு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டின் போது ஒவ்வொரு லொத்தர் சீட்டுக்களும் விற்பனை செய்யப்பட்ட மொத்த லொத்தர் சீட்டுக்களின் அளவில் சசிறி லொத்தர் சீட்டுக்களில் 0.2 வீதமும் லக்ன வாசான லொத்தரில் 0.2 சதவீதமும் சுப்பர் போல் லொத்தரில் 0.3 வீதமும் சனிதா வாசனாவ லொத்தர் சீட்டில் | கடந்த காலத்தில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையினால் சபையினால் அமுல்படுத்தப்பட்ட டிஜிட்டல் லொத்தர் சீட்டிழுப்பு மக்களுக்கிடையே கொண்டு செல்வதில் சிற்சிற நடைமுறை ரீதியாலான பிரச்சினைகள் காணப்பட்டது. அதாவது இந்த App அலகு எங்களின் இலக்கு நுகரும் மக்களுக்கு மாற்றுவதற்காக அவர்களிடம் அதனை ஈடுபடுத்தும் கையடக்கத் தொலைபேசியை நேரடியாக | E லொத்தர் சீட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தி விற்பனைகளை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 0.2 வீதமும் ஆக E-லொத்தர் சீட்டுக்கள் விற்பனை குறைந்த சதவீதத்தில் அறிக்கையிடப்பட்டமையால் நு-வைஉமநவ சீட்டு எண்ணக்கரு தோல்வியடைந்திருந்தது. | உள்ளடக்கப்படல் வேண்டும். அதற்காக நாட்டில் காணப்பட்ட சுகாதார நெருக்கடிகளின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருந்தது. அதனால் இந்த ஈடுபடுத்தல் தொடர்ந்தும் மக்களுக்கிடையே பரவலாக்குவதில் நடைமுறை ரீதியில் பிரச்சினைகள் காணப்பட்டது. | |
| (இ) | சபையினால் Sweep App ஊடாக லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வதற்காக ரூபா 3,275,246 செலவிடப்பட்டிருந்தது. சபையினால் விநியோகிக்கப்படுகின்ற லொத்தர் சீட்டுக்கள் இரண்டு தனியார் நிறுவனங்கள் மூலம் அச்சிடப்படுகின்றது. அந்த இரண்டு தனியார் நிறுவனங்களில் ஒரு நிறுவனத்தால் அச்சிடப்படுகின்றது. இரண்டு தனியார் நிறுவனத்தில் ஒரு தனியார் நிறுவனத்தினால் அச்சிடப்படுகின்ற லொத்தர் சீட்டுக்கள் அந்த App அலகின் ஊடாக விற்பனை செய்வதற்கு அந்த தனியார் நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. இதனால் App இற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் முழுமையாக பயன்படுத்திக் கொள்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | இந்த டிஜிட்டல் லொத்தர் சீட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் கேள்வி கோரலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அச்சகர் ஒருவர் இருந்திருந்ததுடன் அதற்காக அவரின் கேள்வி ஆவணங்களில் இந்த டிஜிட்டல் லொத்தருக்கான தேவையான வசதிகளை வழங்குதல் தொடர்பான நிபந்தனை உள்ளடங்காமையின் காரணமாக ஒரு வழங்குனரிடம் அந்த வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு இணங்கியிருக்கவில்லை. தற்போது புதிய லொத்தர் அச்சகர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த அச்சகரினால் உரிய சகல லொத்தர் சீட்டுக்களும் Sweep App ஊடாக விற்பனை செய்யும் நடவடிக்கைகள் தயார் நிலையில் உள்ளது. எனினும் இந்த Sweep App தயாரிப்பதற்கான மென்பொருள் அபிவிருத்தி செலவினம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சபையின் தீர்மானத்தை அமுல்படுத்தக் கூடிய அச்சிடல் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | பரிசுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 775,750 | பரிசுக்காக கொள்வனவு செய்யப்பட்ட 03 மோட்டார் | அந்த பொருள்கள் பரிசாக ஏனைய |

| | | |
|---|---|---|
| பெறுமதியான 03 மோட்டார் சைக்கிள்கள் 13 வருட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 592,500 கூட்டுப்பெறுமதியான 123 பரிசு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் பரிசுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,053,530 கூட்டுப்பெறுமதியான தங்க பொருட்கள் நீண்டகாலம் முதல் பரிசுக்காக பயன்படுத்தாமல் காணப்பட்டது. | சைக்கிள்களுக்குமுரிய 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதி சுப்பர்போல், 2018 சனவரி 26 கோடிபதி சனிதா மற்றும் 2021 சனவரி 30 சுப்பர்போல் விசேட சீட்டுக்களின் பரிசுக்காக உள்ளடக்கப்பட்டவையாக இருந்ததுடன் சீட்டிப்பின் 06 மாதங்களின் பின்னர் வெற்றியாளர்கள் முன்வராத பரிசு விடயங்களாகும். | லொத்தர் சீட்டுக்களுக்காக பயன்படுத்து வதற்கோ அல்லது அவ்வாறில்லை யாயின் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி லொத்தர் சபையின் பதவியணியினர்களாக 341 பேர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். பிரதி பொது முகாமையாளர் (புதிய வடிவமைப்பு, எண்ணக்கரு மற்றும் விளம்பரம்) பதவி அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த பதவிக்காக மீளாய்வாண்டின் போது 04 மாத காலப்பகுதிக்காக கூட்டுமொத்தமாக ரூபா 634,955 சம்பளமாகவோ, கூட்டுமொத்தமாக ரூபா 277.075 படியாகவோ சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | பிரதி பொது முகாமையாளர் (புதிய வடிவமைப்பு, எண்ணக்கரு மற்றும் விளம்பரம்) பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேவை தேவைக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். அதற்காக 2021 யூலை 09 ஆந் திகதி 254 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றதன் பின்னர் இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் அவை சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு | ஏற்றுக்கொள்கின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | ஆண்டறிக்கையை குறித்துரைத்த திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**4.2 சந்தைப் பங்கு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) போட்டியாளர் நிறுவனத்துடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டில் மொத்த சந்தைப் பங்கு 48 சதவீதம் ஆகும். கடந்த 05 வருட காலத்தில் 43 சதவீதத்திலிருந்து 47 சதவீதம் வரையிலான வீச்சிலான அளவில் காணப்பட்டது. | முன்னைய சந்தையில் மேற்கொள்ளப்பட்ட போட்டியாளர் சந்தையின் உபாய திட்டங்களின் காரணமாக சந்தைப் பங்கு மாற்றமடைந்திருந்தது. | சந்தைப் பங்கை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) சபையினால் சுய போட்டியாளர் நிறுவனமாக குறிப்பிடப்பட்ட தேசிய லொத்தர் சபையின் ரிக்கட் சீட்டுக்கள் ஒரேயொரு விற்பனை கொட்டகையில் ஒரேயொரு விற்பனை முகவரின் மூலம் விற்பனை செய்தல் மற்றும் சபையின் வாகனங்களின் மூலம் தேசிய லொத்தர் சபையின் லொத்தர் சீட்டுக்கள் தூர பிரதேசங்களுக்கு பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சபையின் ஆரம்பம் முதல் இதுவரை தேசிய லொத்தர் சபையுடன் அதற்காக குறித்துரைத்த உடன்படிக்கையோ அல்லது இணக்கப்பாடோ ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்கின்றோம். | சபையின் ஆபத்து தொடர்பாக கவனம் செலுத்தி தேசிய லொத்தர் சபையுடன் எழுத்து மூல உடன்பாட்டிற்கோ அல்லது உடன்படிக்கை யிலோ கைச்சாத்திடல் வேண்டும். |